- The Government of India is providing 50% Capital Subsidy for in-situ upgradation of Plain looms to Semi Automatic Shuttle Looms, Semi Automatic Shuttle Looms to Shuttleless Rapier Looms, Plain Looms to Shuttleless Rapier Looms under PowerTex India. The State Government willalso provide 10% additional capital subsidy under this scheme;
- To fulfill the business needs and integrate the production and boost the export by creating world class infrastructure, 9% of project cost, with a maximum ceiling of Rs.9 crore will be provided as State grant similar to the grants provided under Scheme for Integrated Textile Parks (SITP) under Modified Comprehensive Power loom Cluster Development Scheme (MCPCDS);
- One Time Assistance of 25% of the project cost, with a ceiling of Rs.10 crore for setting up of Trade Facilitation Centre on PPP model will be provided, if encumbrance free land is available with the industry;
- Power loom Census will be undertaken at regular intervals, in coordination with the Government of India, so as to formulate a suitable policy and devise need based programmes;

# உலக மகளிர் தினம் யாருக்கானது?

உலக மகளிர் தினம் தோன்றியதன் வரலாற்றை நாம் பார்த்தோமானால், ஆணாதிக்கம், ஒட்டுமொத்த சமூக அமைப்பு ஆகியவற்றுக்கு எதிராகப் பெண்கள் திரண்ட வரலாறாகவே அது உள்ளது.

கி.பி. 1863, லண்டன் வேல்ஸ் இளவரசருக்கு ஒரு நடனவிருந்து நடத்தப்பட்டது. அதில் கலந்துகொள்ளும் சீமாட்டிகளுக்கு ஆடம்பர உடைகள் தேவையாக இருந்தன. உடைகளைத் தயாரிக்கும் தலை சிறந்த தையல் நிறுவனமாகக் கருதப்பட்ட ஒன்றில் பெண்கள் வேலை செய்தனர். அவர்களில் ஒருவர் மேரி ஆன் வாக்லி. 8 மணி நேரம் அல்ல... தொடர்ந்து 26.5 மணி நேரம் வேலை செய்தார். ஒரு சிறிய காற்றோட்டம் இல்லாத அறையில் அவரைப் போலவே 30 பெண்கள் வேலை செய்தனர். சரியான உணவு, ஓய்வு இல்லாமல், மேரி ஆன் வாக்லி இறந்து போனார். அது வேலை செய்யும் பெண்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. வேலை செய்யும் நேரத்தை முறைப்படுத்த வேண்டும் என்று போராட்டம் தொடங்கியது. ஆண், பெண் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 8 மணி நேர வேலைக்காக போராடினார்கள்.

8 மணி நேர வேலைக்கான இந்தப் போராட்டம் இங்கிலாந்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. 1886 மே மாதம் 1ம் தேதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் வேலை நிறுத்தப் போராட்டமாக வெடித்தது. வேலை நிறுவத்தத்தை ஒடுக்க காவல்துறையினர் பலரைச் சுட்டுக் கொன்றனர். நீதிமன்றம் விசாரித்து பலருக்குத் தூக்குத் தண்டனை வழங்கியது. போராட்டங்களை ஒருங்கிணைக்க பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் சோசலிஸ்ட் அகிலத்தின் முதல் மாநாடு 1889ல் நடந்தது. வேலை நேரம், பெண்களுக்கான உரிமைகள் தொடர்பாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் கலந்து கொண்டவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த கிளாரா ஜெட்கின். அவருடைய முன்முயற்சியினால் சோசலிஸ்ட் பெண்கள் இயக்கம் உருவானது.

1907ம் ஆண்டு ஜெர்மனியில் சோலிஸ்ட் பெண்கள் மாநாடு நடந்தது. அப்போது பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்ற முழக்கம் எழுந்தது.

1908-ல் அமெரிக்காவில் சிகாகோ, நியூயார்க் நகரங்களில் பெண்களுக்கான சம உரிமை கேட்டுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் எட்டுமணி நேர வேலை, கூலி உயர்வு, வாக்குரிமை கேட்டு நியூயார்க் நகரில் அணிதிரண்டனர். 1909 பிப்ரவரி 28ம் தேதி பெண்களின் வாக்குரிமைக்கான ஆர்ப்பாட்டம் அமெரிக்காவில் நடந்தது. கருவுற்ற பெண்கள், குழந்தைகள், தாய்மார்கள் பாதுகாப்பு, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் சமத்துவம் ஆகியவற்றுக்கான தீர்மானங்களுடன், மகளிர் தினம் பற்றிய தீர்மானம் 1910ல் டென்மார்க்கில் கோபன்ஹேகனில் நடந்த சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

1911 மார்ச் 19ல் டென்மார்க், ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா ஆகிய நாடுகளில் முதல் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இந்த மகளிர் தினம் உழைக்கக் கூடிய பெண்களை எல்லாம் ஒற்றுமைப்படுத்தும் தினமாகக் கருதப்பட்டது. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் நாடு முழுக்க திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் நிகழ்வாக இந்த மகளிர் தினம் இருந்தது. இது உலகின் பிற பகுதிகளிலும் பரவியது.

1917ம் ஆண்டு மார்ச் 8-ல் ரஸ்ஸியாவில் ஜவுளி ஆலை பெண் தொழிலாளர்கள் புரட்சியைத் தொடங்கினார்கள். ஆலைகளில் வேலை செய்யும் பெண்களுக்கு மேலதிகாரிகளினால் பாலியல் துன்புறுத்தல்கள் இருந்தன. பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். அவற்றை எதிர்த்து பெண் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்களில் ஆண் தொழிலாளர்களும் இணைந்தனர். 2 லட்சம் தொழிலாளர்களுடன் பேரிணி நடந்தது. இந்த நிகழ்வை நினைவுகூறும் விதத்தில் மார்ச் 8 – ஐ மகளிர் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று மாஸ்கோவில் 1921ம் ஆண்டு நிகழ்ந்த கம்யூனிஸ்ட் பெண்கள் அகிலத்தில் முடிவெடுக்கப்பட்டது.

1922ம் ஆண்டு சீனாவில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. 1927 ஹுவாங்செள நகரில் நடந்த பேரணியில் 25 ஆயிரம் பெண்கள் கலந்து கொண்டனர்.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, உலகமெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்படுவது வழக்கமான பிறகு, ஐக்கியநாடுகள் சபை சர்வதேச மகளிர் தினத்தை ஒவ்வொராண்டும் மார்ச் 8ம் தேதி பெண்களின் உரிமைக்காகவும், உலக அமைதிக்காவும் கொண்டாட வேண்டும் என்று 1975ல் அறிவித்தது. உலக மகளிர் தினம் கொண்டாடப்படும் நிகழ்வு, உழைக்கக் கூடிய பெண்கள் அவர்களுடைய உரிமைக்காக நடத்திய போராட்டங்களின் விளைவாகத் தோன்றியது. சம வேலைக்கு சம கூலிக்காக, பாலியல் துன்புறுத்துதல்களுக்கு எதிராக, பெண்களின் வாக்குரிமைக்காக, பெண்கள் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காக உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

நிறைவாக, மகளிர் தினம் என்றால் அது எல்லாப் பெண்களுக்கும் உரிய தினம் என்பதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. மகளிர் தினம் என்பது பொதுவான கொண்டாட்டம் அல்ல. அது உழைக்கும் பெண்களுக்கான தினம். பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காக ஒன்று திரள வேண்டும் என்பதை வலியுறுத்தும் தினம்.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# மின் இணைப்புடன் ஆதார் இணைக்காவிட்டால்
# 100 யூனிட் இலவச மின்சாரம் ரத்து செய்யப்படுமா?

மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்க இன்னும் 30 லட்சம் பேர் இணைக்காமல் உள்ளதாக சமீபத்திய நாளிதழில் செய்தி வெளியானது. பலருக்கு இது குறித்த சந்தேகங்களும் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, ஆதார் எண்ணை மின் இணைப்புடன் இணைப்பது குறித்த சில முக்கிய சந்தேகங்களுக்கு லாப் ஸமாச்சார் வாசகர்களுக்காக பதில் அளிக்கப்பட்டுள்ளது.

★ ஆதாரை இணைக்க https://nsc.tnebltd.gov.in/adharupload/ என்ற இணையதள பக்கத்திற்கு சென்று உங்களின் மின் இணைப்பு பதிவை உள்ளிட்டு ஆதார் எண்ணை இணைக்கலாம். அல்லது மின் வாரிய அலுவலகத்திற்கு நீங்களே நேரில் சென்று ஆதார் எண்ணை இணைக்கலாம்.

★ உங்களின் பழைய எண் கையில் இல்லை என்றாலும், இப்போது உங்களிடம் இருக்கும் எண்ணை பதிவிட்டால், நீங்கள் ஆதாரை இணைக்கலாம். முன்னதாக, உங்கள் மொபைல் எண்ணை நீங்கள் பதிவு செய்ய வேண்டும். அப்போது தான் ஓடிபி மூலம் இணைக்க முடியும்.

★ வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள், வீட்டின் உரிமையாளர் அனுமதி தந்தால் வாடகை வீட்டில் உள்ளவரே பதிவு செய்துகொள்ள முடியும்.

★ வீடு, விசைத்தறி, விவசாயம் மற்றும் குடிசை வீட்டு மின் நுகர்வோர்கள் ஆதார் எண்ணை இணைக்கலாம்.

★ வீட்டின் உரிமையாளர் மட்டுமே மின் இணைப்பின் பெயரில் மாற்றம் செய்ய முடியும். வாடகைக்கு இருக்கும் நபரின் ஆதார் எண்ணை இணைத்தால், மின் இணைப்பு அவரது பெயருக்கு மாறிவிடாது.

★ வாடகைதாரர் மாறும்போது, புதிதாக குடியிருக்க வருவோரின் ஆதாரை இணைக்கலாம்.

★ ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகளை வைத்திருப்பவர்கள், ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனி மீட்டர்கள் இருக்கும் பட்சத்தில், உங்கள் ஆதார் எண்ணையே அனைத்து இணைப்புகளுக்கும் வழங்க முடியும். அதனால், எந்தப் பாதிப்பும் இல்லை.

★ ஆதாரை இணைக்க காலக்கெடு இல்லை; ஆனால் மானியம் பெறுபவர்கள் கட்டாயம் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

★ ஆதார் எண்ணை இணைக்காவிட்டாலும், மின் வாரிய அலுவலகங்களில் மின் கட்டணம் செலுத்தலாம். ஆனால், ஆதார் எண்ணை இணைத்தால் மட்டுமே, ஆன்லைனில் மின் கட்டணம் செலுத்த முடியும் என்று மின் வாரியம் தெரிவித்துள்ளது.

★ என் தாத்தா / அப்பா பெயரில் மின் இணைப்பு உள்ளது. ஆனால், அவர் இறந்துவிட்டார். மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றாலும், யார் பெயரில் மாற்றம் செய்ய உள்ளீர்களோ அவரது பெயரில் உள்ள ஆதார் எண்ணை இணைக்கலாம். உங்களுடைய பெயரில் நீங்கள் ஆதார் எண்ணை இணைக்க வேண்டுமானால், உங்களுடைய ஆதார் கார்டை பதிவேற்றம் செய்தால் போதும்.

★ ஆதார் எண்ணை இணைப்பதால் 100 யூனிட் இலவச மின்சாரம் கட்டாயம் ரத்து செய்யப்படாது. அப்படி யாரும் அச்சப்பட வேண்டாம் என அமைச்சர் செந்தில் பாலாஜி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

★ ஆதாரை இணைக்க காலக்கெடு எதவும் இல்லை. ஆனால் கட்டாயம் இணைக்க வேண்டும்.

### இணையம் மூலம் எவ்வாறு ஆதார் எண்ணை இணைப்பது?

**முதல்நிலை:** ஆதாரை இணைக்க https://nsc.tnebltd.gov.in/adharupload/ என்ற இணையதள பக்கத்திற்கு சென்று உங்கள் மின் இணைப்பு எண்ணை பதிவு செய்யவும்.

**இரண்டாம்நிலை:** உங்கள் மின் இணைப்பில் இணைத்துள்ள மொபைல் எண்ணிற்கு ஒரு ஓடிபி வரும். அந்த ஓடிபி–யை பதிவிட்ட பிறகு, உங்களின் ஆதார் கார்டையும், ஆதார் எண்ணையும் பதிவிட வேண்டும்.

**மூன்றாம்நிலை:** நீங்கள் அந்த வீட்டிற்கு உரிமையாளரா அல்லது வாடகைக்கு குடியிருப்பவரா அல்லது நீங்கள் அந்த வீட்டின் உரிமையாளர் ஆனால் மின் இணைப்பு வேறு ஒருவர் பெயரில் உள்ளதா என்ற ஆப்ஷன்கள் தோன்றும். அதில் உங்களுக்கான விருப்பத்தை தேர்வு செய்து சப்மிட் செய்தால் போதும், உங்களின் ஆதார் எண்ணை மின் இணைப்போடு இணைத்துவிடலாம். இதையடுத்து ஒப்புகை ரசீது வரும். அதை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.


TATA AIG INSURANCE

**TATA HEALTH INSURANCE**

தனி நபர் மற்றும் குடும்பத்திற்கு மருத்துவக் காப்பீடு

0% EMI முறையில் மருத்துவப்பாலிசி எடுத்துக்கொள்ளலாம்

த ⁴க்குனாத்த அவோ!... விசார் சொடுவோ!...

15% இந்த விளம்பரத்தை பார்த்து பாலிசி எடுக்கும் நபருக்கு தள்ளுபடி வழங்கப்படும்



S J RAJ KUMAR
Branch Manager
Call: 93608 71715

WITH YOU ALWAYS



- ✓ நுழைவு வயது வரம்பு கிடையாது.
- ✓ காப்பீடு தொகை ரூ. 3 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை.
- ✓ அறை வாடகையிலிருந்து 100% க்ளைம் பெறும் வசதி உள்ளது.
- ✓ புறநோய் / பல் மருத்துவம் / எடை குறைப்பு சிகிச்சைக்கு க்ளைம் பெரும் வசதி உண்டு.
- ✓ வெளிநாடுகளுக்கு சென்று சிகிச்சை பெறும் வசதி. (Global Cover)
- ✓ பாரம்பரிய ஆயுஷ் மருத்துவத்திற்கும் முழு காப்பிடு வழங்கப்படும்.
- ✓ அட்மிஷனுக்கு முன்னரும், டிஸ்சார்ஜ்க்குப் பின்னரும் ஆகும் செலவுகளைப் பெறலாம்.
- ✓ கட்டும் பிரிமியம் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு.(80D)
- ✓ மருத்துவனையில் பணம் செலுத்தாமல் சிகிச்சை பெறும் வசதி
- ✓ நார்மல் & சிசேரியன் பிரசவத்திற்கான செலவுகளை பெறலாம்.
- ✓ சிகிச்சையினால் ஏற்படும் வருமான இழப்பிற்கு காப்பீடு.

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் சந்திப்புகள் மற்றும் நிகழ்வுகள்



## சிறப்பு சந்திப்பு

நமது சேமபர்–ன் ஜனவரி 2023 மாத லாப் ஸமாச்சார் இதழ் அனைத்து இந்திய வானொலி நிலையத்தின் உழைப்பவர் உலகம் நகழ்ச்சியின் இயக்குனர் திரு. வேல்முருகன் அவர்கள் கரங்களால் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில், இணைச் செயலாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண், பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன், இதழ்குழுவினர்கள் திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு, திரு. S.M. கார்த்தி குமரன் (இதழ் குழு சேர்மன்) மற்றும் திரு. T.K. யாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜி.எஸ்.டி. குறைதீர் கூட்டம்

மதுரை ஜி.எஸ்.டி வரி அலுவலகத்தில் 07.02.2023 அன்று நடைபெற்ற ஜி.எஸ்.டி. குறைதீர் கூட்டத்திற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் கலந்து கொண்டு, அங்கத்தினர்களிடமிருந்து பெறபட்ட ஜி.எஸ்.டி வரி சார்ந்த குறைகள் குறித்த விபரங்களை மனுவாக அளித்தனர். ஜி.எஸ்.டி. வரி ஆணையர் திரு. ஆரோக்கியராஜ் அவர்கள் மனுவை பரிசீலிப்பதாகத் தெரிவித்தார். இதற்கு முன் நடைபெற்ற கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் சென்னைக்கு உரிய துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அலுவலக கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்.



## Now GST Payment can be made through 21 Banks

**Via e-Payment (Net Banking) and Over the Counter modes**

**Now newly added CITY UNION BANK**

- Axis Bank
- Bank of Baroda
- Bank of India
- Bank of Maharashtra
- Canara Bank
- Central Bank of India
- City Union Bank
- Federal Bank
- HDFC Bank
- ICICI Bank Limited
- IDBI Bank
- Indian Bank
- Indian Overseas Bank
- Jammu and Kashmir Bank Limited
- Karur Vysya Bank
- Kotak Mahindra Bank Limited
- Punjab and Sind Bank
- Punjab National Bank
- State Bank of India
- Uco Bank
- Union Bank of India




Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

VIJAYASHANKAR SCREEN SUPPLIERS

Non Woven Fabrics & Bags
Surgical Spunbond & Lace
SMMS
100% Viscos
Hydrophilic
JUTE FABRICS & BAGS
COTTON FABRICS & BAGS
Sanitary Napkin Raw Materials
Screen Printing Materials /
Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper





Surgical Gown, Mask & More
N95 Masks
PPE Kit Surgical
J.A. SANKAR
94431 34465
For Order & Info
93441 04451, 91500 32885 / 86
H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com
B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001

## சுதந்திர தினத்தன்றும் குடியரசு தினத்தன்றும்
## கொடி ஏற்றுவதில் உள்ள வேறுபாடுகள்

**முதல் வித்தியாசம்:** பதினைந்து ஆகஸ்ட் சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றும்போது கொடி கீழிருந்து மேலே கயிற்றால் இழுத்து பிறகு கட்டப்பட்டுள்ள கொடி திறக்கப்பட்டு பறக்கவிடப்படும். அன்றைய தினத்தன்று மரியாதை செய்யும் விதமாக செய்யப்படும் இந்த நிகழ்வுக்கு "கொடியேற்றம்" . அதாவது Flag Hoisting என்றழைக்கப்படுகிறது.

இருபத்து ஆறு ஜனவரி மாதம் குடியரசு தினத்தன்று கொடி கம்பத்தின் உச்சியிலேயே கட்டப்பட்டு இருக்கும். அந்த முடிச்சு அவிழ்க்கப்பட்டு, அதாவது கொடி திறக்கப்பட்டு பறக்கவிடப்படும். இதை கொடியை "பறக்கவிடுதல்" அதாவது flag Unfurling என்பார்கள்.

**இரண்டாவது வித்தியாசம்:** சுதந்திரம் கிடைத்தபோது அரசியல் சட்டம் அமுலுக்கு வரவில்லை. அப்பொழுது பிரதமர் தான் நாட்டின் முதல் மனிதராக (Political Head) கருதப்பட்டார். குடியரசு தலைவர் ஒரு Constitutional Monarchy அவர் அப்போது பதவி பிரமானம் எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் சுதந்திர தினத்தில் பிரதமர் கொடி ஏற்றுகிறார். குடியரசு தலைவர் மாலையில் ரேடியோ தொலைகாட்சி மூலமாக உரையாற்றுகிறார்.

குடியரசு தினத்தன்று அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தபடியால் அரசியல் சட்டத்தின் தலைவர் மற்றும் பாதுகாவலர் என்ற முறையில் குடியரசு தலைவர் கொடியை பறக்கவிடுவார்.

**மூன்றாவது வித்தியாசம்:** சுதந்திர தினத்தன்று டில்லி செங்கோட்டையில் கொடி ஏற்றப்படுகிறது.

குடியரசு தினத்தன்று டில்லி ராஜ்பாத்-ல் கொடி பறக்கவிடப்படுகிறது.

## ஆரோக்கியமான
## தூக்கம் தரும் இசை

உறங்கும் நேரத்தில் இசையைக் கேட்பது, நமது இதயத் துடிப்பு மற்றும் சுவாசத்தை ஒழுங்குபடுத்தி, மன அழுத்த ஹார்மோன்களின் அளவைக் குறைத்து, நமது தூக்கத்தை எளிதாக்குகிறது. இது நமது உடல், மன ஆரோக்கியத்திற்கு வலுவான அடித்தளத்தை வழங்குகிறது. அமைதியான இசையைக் கேட்பது எப்படி தூக்கத்தை மேம்படுத்துகிறது என்பதை ஆராய்ச்சி குழு நிரூபித்து வருகிறது. உண்மையில், இசை பாராசிம்பேடிக் நரம்பு மண்டலம் உள்பட முழு மூளையையும் தூண்டுவதாக ஆராய்ச்சி கூறுகிறது. இது உடலை ஓய்வெடுக்கவும் மற்றும் தூங்கவும் செய்கிறது. நாள்பட்ட தூக்கப் பாதிப்பு உள்ளவர்களுக்கு சிறந்த தூக்கத்தைப் பெற உதவுவதில் இசை பயனுள்ளதாக இருக்கிறது. உணர்ச்சிகரமான எதிர்வினைகளை ஏற்படுத்தும் இசையை தவிர்க்க வேண்டும். பல சுகாதார அமைப்புகள் தூங்குவதற்கு முன் அமைதியான இசையைக் கேட்க பரிந்துரை செய்கின்றன.

### ஒரு நாளைக்கு எத்தனை
# டீ குடிக்கலாம்?
### அதிகம் குடித்தால் என்னவாகும்?

இந்த மனத்துக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியை தரக்கூடிய தேநீர் அல்லது டீ பலருக்கு தனிமையைப் போக்க, ஆசுவாசப்படுத்திக்கொள்ள, மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள என சிறந்த பானமாக இருக்கிறது. டீ குடிப்பது நல்லதா, கெட்டதா அதனால் ஏற்படும் விளைவுகள் என்னென்ன என்பது குறித்து ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், டீ குடிப்பதை அன்றாட வழக்கமாக வைத்திருப்பவர்கள் இன்று அதிகம். டீ குடித்தால் என்னென்ன நன்மை?. 1. டீ-யில் ஆண்டி-ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளது. இயற்கையாகவே நம் உடலில் இருக்கும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்களை அதிகரிக்கிறது. 2. வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. 3. மாரடைப்பு வராமல் தடுக்க உதவுகிறது. 4. இது வாய்வழி கோளாறுகளைத் தடுக்கிறது. 5. புற்றுநோயைத் தடுக்க உதவுகிறது என்று பல ஆய்வுகள் கூறுகின்றன. 6. அதுபோல ஆயுளைக் கூட்டும் என்று சமீபத்திய ஓர் ஆய்வில் வந்துள்ளது. 7. மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. 8. உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.

எந்தவொரு உணவும் அளவுக்கு மீறினால் நஞ்சுதான். டீ-யும் அப்படித்தான். நாள் ஒன்றுக்கு சாதாரணமாக ஒன்று அல்லது இரண்டு கப் டீ மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர் உடல்நல நிறிணர்கள்.

ஒரு கப் டீ 100-150 மி.லி. வரை இருக்கலாம். காலை எழுந்ததும் ஒரு டீ-யும், பிற்பகல் அல்லது மாலையில் ஒரு டீ-யும் குடிக்கலாம். இரவு டீ குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். அது தூக்கமின்மையை ஏற்படுத்தும்.

டீ-யில் காஃபின் மற்றும் சர்க்கரை அளவை முடிந்தவரை குறைத்துக்கொள்ளலாம்.

ஏனெனில், காஃபின் அதிகம் இருந்தால் பக்க விளைவுகள் ஏற்படும். குறிப்பாக ஹீமோகுளோபின் உற்பத்தியைத் தடுத்து ரத்த சோகையை ஏற்படுத்தும். குறிப்பாக ரத்த சோகை உள்ள பெண்கள் காஃபின் குறைவாக எடுத்துக்கொள்வது நல்லது.

எனினும், பால் கலந்த டீ-யை விட பால் கலக்காத பிளாக் டீ அல்லது கிரீன் டீ தான் மிகவும் சிறந்தது என்கின்றனர் ஆய்வாளர்கள். நாள் ஒன்றுக்கு 4-5 கப் டீ குடிக்கலாம் என்கின்றன சில ஆய்வுகள். அவை எல்லாம் பிளாக் டீ அல்லது கிரீன் டீ கணக்கில்தான் வரும்.

அதேபோன்று, பிளாக் டீ-யை விட கிரீன் டீ தான் சிறந்தது. உடல் எடையைக் குறைக்க கிரீன் டீ மிகவும் உதவுகிறது. அதுபோல மூலிகை டீ-யையும் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

உண்மையில் டீ அதிகம் குடித்தால், உடலில் இரும்புச்சத்து உறிஞ்சுவதை குறைக்கும். இதனால் ரத்த சோகை, பதட்டம், மன அழுத்தும் ஏற்படும். குமட்டல், வயிற்றுவலி, தலைவலி, நெஞ்செரிச்சல்,தூக்கமின்மை ஏற்படலாம். கர்ப்பிணிகள் டீ குடிப்பதை தவிர்த்து பால் அருந்தலாம். – தினமணி

# சமூக நிகழ்வுகள்

தங்கள் பகுதியில் நடைபெறும் சமூக
நிகழ்வுகள் இடம் பெற வாட்ஸ்ஆப் செய்யுங்கள்
**93441 97952**


ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் அவர்களின் 153வது ஜெயந்தி விழா
சாதனை சிகரம் புத்தகம் & தினசரி நாட்காட்டி காலண்டர் வெளியீடு






14.01.2023 அன்று ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் அவர்களின் 153வது ஜெயந்தி விழா, தெற்கு மாசிவீதி, ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி முன்பாக நடைபெற்றது. நற்பணி மன்ற நிறுவன தலைவர் திரு. N.S.R. சாந்தாராம் அவர்கள் தலைமைத் தாங்கினார்கள். திரு. L.R. உமாபதி மற்றும் திரு. J.T. ஹரிராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை திரு. R.B.R. ராம சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார். ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் சிலைக்கு கல்வித்தந்தை திரு. K.B. ராதாகிருஷ்ணன் அவர்கள் மலர் மாலை அணிவித்து புகழாரம் சூட்டினார்கள். ஸௌ. கல்லூரி செயலாளர் திரு. D.R. குமரேஷ் L.K. துளசிராம் உருவப்படம் கொண்ட தினசரி நாட்காட்டி காலண்டர் வெளியீடு செய்தார்கள். கூட்டுறவு வங்கிகளின் பெருந்தலைவர் திரு. T.S. சாரதி அவர்கள் எல்.கே. துளசிராம் அவர்களின் **சாதனை சிகரம்** புத்தகம் வெளியிட்டார்கள். திருவுருவ படத்தை தமிழ்நாடு மாநில அமைப்பு செயலாளர், பறக்கும்படை திரு. கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார்கள். இந்த விழாவில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. சரவணன், முன்னாள் மருத்துவ கல்வி தமிழ்நாடு இயக்குனர் Dr.J.R. விஜயலட்சுமி, ஸௌராஷ்ட்ர சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன், திரு. J.R. வித்யா பூர்ணாச்சாரி, திரு. S.K.B. சந்திரபிரகாஷ் என சமூக முக்கியப்பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.


BAJAJ Allianz
Bajaj Allianz Life Insurance Co. Ltd.
WE ARE HIRING

Role: Retail Partner
Hiring for Bajaj Allianz Life Insurance Co. Ltd.,
Experience: Min. 2 Yrs. and above in Sales
Qualification: Any Degree
Location: Madurai & Chennai
Salary: Rs. 19,000/- + Incentive
Contact : Prasanna Venkatesh - 77088 48697




★ பொங்கல் திருநாளை முன்னிட்டு திருநகர் மகாலட்சுமி காலனியில், ஸ்ரீமந் நடன கோபால நாயகி இயக்கம் சார்பில் குழந்தைகளுக்கான சைக்கிள் போட்டி, பெண்கள் மியூசிக் சேர், இளைஞர்களுக்கான உரியடி என பல்வேறு விதமான போட்டிகள் நடைபெற்றன. வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.

★ தேவையில்லாத நேரங்களில் மின்விசிறி / மின் விளக்குகளை அணைக்கவும்.

★ மறுசுழற்சிக்கு உகந்த பிளாஸ்டிக்-ஐ மட்டுமே பயன்படுத்தவும்.

★ இதே போல, மதுரை, கிருஷ்ணாபுரம் காலனியிலும், பொங்கல் திருவிழா போட்டிகள் வெகு சிறப்பாக ஸௌராஷ்ட்ர சமூக பிரமுகர்களால் நடத்தப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

★ 26.01.2023 அன்று ஜுட்டி பங்காளி சகோதரர்கள் தர்ம பரிபாலன ஸபைக்கு பாத்தியமான ஸ்ரீ திரௌபதி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. கோயில் நிர்வாகஸ்தர்கள், சமூக முக்கியப்பிரமுகர்கள் மற்றும் பக்தகோடி பெருமக்கள் பலர் விழாவில் கலந்துகொண்டு அம்மன் அருளைப் பெற்றனர்.

## இரங்கல்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் ஆயுட்கால உறுப்பினர், தொழிலதிபர் மல்லிகை **திரு. எம். பாலச்சந்திரன்** அவர்கள் கடந்த 04.02.2023 அன்று காலாமானார். சமூக சேவையுள்ளம் கொண்ட மாமனிதர் இன்று நம்மை விட்டு பிரிந்து சென்றது மிகவும் வருத்தமளிக்கிறது. அவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனையும் வேண்டுகிறோம்.


மல்லிகை
**திரு. எம். பாலச்சந்திரன்**
மறைவு : 04.02.2023

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# திருக்குறள் கூறும் குற்றங்களை நீக்குதல்

- அகங்காரமும் கோபமும் அற்பத்தனமும் இல்லாதவர்களுடைய செல்வம் தான் பெருமை கொள்ளத்தக்கது.
- நாட்டிற்கோ, வீட்டிற்கோ தலைவனாக இருப்பவனுக்கு, பேராசையும், பெருந்தன்மையில்லாத தன்மதிப்பும், அற்பத்தமனமான மகிழ்ச்சியும் தலைவனுக்குக் குற்றங்களாகும்.
- குற்றம் செய்வதில் பெரிய குற்றம், சிறிய குற்றம் என்பதில்லை. பழிக்கு அஞ்சுகிறவர்கள் தினையளவு சிறிய குற்றம் நேர்ந்துவிட்டாலும் பனையளவு மிகப் பெரிய குற்றம் வந்துவிட்டதாக வருத்தப்படுவார்கள்.
- குற்றம் செய்வதுதான் துன்பங்களை உண்டாக்கும் பகை. ஆகையால், குற்றம் செய்யாமலிருப்பதைத்தான் செல்வத்தைப் பாதுகாப்பதுபோல் கவனித்துக் கொள்ள வேண்டும்.
- குற்றம் செய்தபின் வருந்திப் பயனில்லை. செய்துவிடாமல் எச்சரிக்கையாகத் தடுக்க வேண்டும். குற்றம் செய்வதற்கு முன் எச்சரிக்கையாக இருந்து விலக்கி விடாதவனுடைய வாழ்க்கை நெருப்புத் தீண்டுவதற்குமுன் தடுப்பாரில்லாத வைக்கோல் பொதிபோல் அழிந்தே போகும்.
- பிறர் குற்றத்தைக் கண்டிப்பதற்கு முன்னால், தன் குற்றங்களை முதலில் நீக்கிக்கொண்டு அதன் பிறகு பிறர் குற்றத்தைக் கண்டிக்கிற தலைவனுக்கு ஒரு துன்பமும் வராது.
- அப்படித் தன்னிடத்திலும் தனக்கு உட்பட்டவர்களிடத்திலும் குற்றமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் அசட்டையாக இருந்து வருகிறவனுடைய செல்வ வளம் தப்பாமல் கெட்டுப் போகும்.
- குற்றமென்று அறிந்தபின் ஒரு குற்றமான பழக்கத்தில் மிகுந்த பற்றுடையவனாக இருப்பதற்காகவாவது, குற்றம் செய்கிற ஒருவன் தனக்கு மிகவும் பற்றுடையனாக இருக்கிறான் என்பதற்காகவாவது குற்றத்தை நீக்காமல் அசட்டை செய்வது எந்த அறிவோடும் சேர்ந்ததன்று.
- தன் குற்றமானாலும் தன்னைச் சேர்ந்த பிறர் குற்றமானாலும் போவதற்குத் தன்னைத்தானே குற்றமற்றவனாக ஒருநாளும் புகழ்ந்து கொள்ளக்கூடாது. பிறர் செய்கிற எந்த நன்மையற்ற காரியத்தையும் பாராட்டக் கூடாது.
- குற்றங்களுக்கு மூலகாரணமாகிய, ஆசைப்பட்டதையெல்லாம் அடைய விரும்புகின்ற அறியாத்தனத்தை நீக்கிவிட்டால், அதன்பின் பகைமை என்பதற்குக் காரணமாகிய குற்றங்களும் பகைவரின் சூழ்ச்சிகளும் இல்லாமற் போகும்.





Sourashtra Chamber of Commerce
Bank Details:
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0011544

Kindly Save our
Whatsapp No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
93441 97952

Kindly send your Feedbacks of our laabh Samachar & SCC Activities To
93441 97952






# வரி – கேள்வியும் பதிலும்

## மின்சார வாகனம் - வருமான வரிச் சட்டத்தில் தேய்மானம் எவ்வளவு?

**வெளிநாட்டில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு Debit note with LUT number போடலாமா அல்லது Tax Invoice தான் போட வேண்டுமா?**

பதில்: வெளிநாட்டு வர்த்தகத்தில் வெளி நாட்டவரும் / வங்கிகளும் பொதுவாக Debit note ஏற்றுக் கொள்வதில்லை. Tax invoice with cross reference போடவும்.

**Revised return என்பதை தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு ஒரு Assessee கமிஷனருக்கு Petition போட இயலுமா?**

பதில்: இயலாது. TDS / Loss மூலம் Refund இருந்து அவர் ரிட்டனே தாக்கல் செய்யவில்லை என்றால் Commissioner அவர்களுக்கு Sec. 119(2)(b) யில் Petition போடலாம்.

**Scrap-ஆக Stock-ஐ விற்றால் ITC-ஐ Reverse செய்ய வேண்டுமா?**

பதல்: வேண்டாம். அசல் விலை அந்த சரக்கிற்கு என்னவோ அதே வரி விகிதத்தில் தான் Scrap என்பதும் வரிக்குட்படும். இந்த விற்பனைக்கு ITC எடுக்கலாம்.

**மின்சார வாகனம் (e-Vehicle) என்பதற்கு வருமான வரிச் சட்டத்தில் தேய்மானம் எவ்வளவு?**

பதில்: மின்சார வாகனத்திற்கு தனியாக தேய்மானம் எதுவும் வருமான வரிச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. வழக்கமான 15% அல்லது 30% (வாடகை) என்பது இதற்கும் பொருந்தும்.

## வணிகர்கள் கவனத்திற்கு வணிகவரித்துறை வெளியிட்டுள்ள செய்தி

கடந்த 10.01.2023 அன்று, சென்னையில் உள்ள வணிகவரித்துறை ஆணையர் அலுவலகத்தின் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியானது,

"வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு வணிகர்களின் வியாபார தலங்களில், வணிகவரித்துறை அதிகாரிகளால் ஆய்வு மற்றும் தணிக்கை ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது.

இதில், ஆய்வு என்பது சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டப் பிரிவு 67ன் கீழ் வணிகர்களுக்கு எவ்வித முன் அறிவிப்பும் இன்றி அந்தந்த அதிகார எல்லைக்குட்பட்ட (Jurisdiction) இணை ஆணையர்களின் அங்கீகாரச் சான்றின் மூலம் உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்.

களத்தணிக்கை என்பது சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டப் பிரிவு 65ன் கீழ் உரிய படிவத்தின் வணிகர்கள் / வணிக நிறுவனங்களுக்கு தெரிவித்த பின்னரே மேற்கொள்ளப்படும். மேலும், ஆய்வு / தணிக்கை தொடர்பாக வணிகவரித்துறையினரால் எவ்வித தொலைபேசி அறிவிப்பும் செய்யப்படுவதில்லை.

எனவே, ஆய்வு / தணிக்கை தொடர்பான நடவடிக்கை குறித்து வரும் தொலைபேசி தகவல்களை வணிகர்கள் நம்ப வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது." என்று வணிகர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜி.எஸ்.டி. எண் வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

**Circular No. 64/38/2018-GST Dt. 14.09.2022**

Instead of regular penalty of Rs. 20,000 (Rs. 10000 + Rs. 10000), the penalty has been restricted to Rs. 500 + Rs. 500 ( in total Rs. 1000) for small errors such as Name Spelling error, Error in PIN Code, Error in address, Error in one or two digits of document number, HSN errors (first two digits correct), Error in two digits of vehicle number penalty is restricted.

This circular may be safely kept by all GSTIN holders and while the consignment is intercepted by the Roving Squad and a penalty of Rs. 20000/- is attempted, this circular copy can be shown and most humbly requested for relief.

ரூ. 20,000/- (ரூ. 10,000 + ரூ. 10,000) ஆக இருந்த அபராதம், தற்பொழுது இந்த சுற்றறிக்கையின்படி ரூ. 500 + ரூ. 500 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதவாது, பெயர் எழுத்துப்பிழை, பின்கோடு பிழை, முகவரியில் பிழை, ஆவண எண்ணில் ஒன்று அல்ல இரண்டு இலக்கங்களில் பிழை, HSN பிழைகள் (முதல் இரண்டு இலக்கங்கள் சரி), வாகன எண்ணி; இரண்டு இலக்கங்களில் பிழை போன்ற சிறிய பிழைகளுக்கு மட்டுமே பொருந்துமாறு Circular அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை அனைத்து ஜி.எஸ்.டி. எண் வைத்திருப்பவர்களும் பாதுகாப்பாக வைத்திருக்கலாம். மேலும் சரக்குகளை ரோவிங் ஸ்குவாட் சோதனையிட்டு ரூ. 20,000/- அபராதம் விதிக்க முயற்சிக்கும் போது, இந்த சுற்றறிக்கை நகலை காண்பித்து மிகவும் தாழ்மையுடன் நிவாரணம் பெற கோரலாம்.


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்



ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

## கேள்வி - பதில் போட்டி

இந்த கேள்வி பதில் போட்டியில், சரியான விடையளிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும். கீழ்காணும் கேள்விகளுக்கான தங்களின் பதிலை எழுதி புகைப்படம் எடுத்து, **93441 97952** என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்யவும். பிரதி மாதம் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் சேம்பர் வர்த்தக கூட்டத்தில் அங்கத்தினர்கள் முன் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1.ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் எத்தனாவது பிறந்தநாள் சமீபத்தில் கொண்டாடப்பட்டது.? ..........

2. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கி எத்தனை ஆண்டுகள் ஆகிறது?

..........

3. சேம்பர்-ல் நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தில் எத்தனை மினி ஸ்டால்கள் பங்கேற்றன?.

..........

4. இந்திய ரிசர்வு வங்கி ரெப்போ விகிதத்தை எத்தனை சதவீதம் உயர்த்தியுள்ளது.?

..........

5. ஆதார் எண் இணைக்காவிட்டால், 100யூனிட் இலவச மின்சாரம் ரத்து செய்யப்படுமா?

..........

| | |
|---|---|
| முதல் பரிசு ரூ. 500/- | பெயர் :.......... |
| | தொழில்:.......... |
| இரண்டாம் பரிசு ரூ. 300/- | தொலைபேசி எண்:.......... |
| | சேம்பர் உறுப்பினரா?: ஆம் / இல்லை .......... |
| மூன்றாம் பரிசு ரூ. 200/- | இருப்பிடம்:.......... |

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** எனது, முழுங்காலில் மூன்று ஆண்டுகளாக வலி உள்ளது. எனது மூட்டு, தேய்மானம் ஆகிவிட்டதாக மருத்துவர் கூறுகிறார். அதை சரி செய்ய அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரை செய்துள்ளார். அறுவை சிகிச்சை நுண்துளையில் செய்ய இயலுமா?

**பதில்:** மூட்டு தேய்மானம் ஒரு பகுதியில் மட்டும் இருந்தால் தற்போதைய நவீன தொழில்நுட்பத்தில் "கார்டி லேஜ் கல்ச்சர்" முறையில் ஜவ்வு மாற்றும் சிகிச்சை நுண்துளை சிகிச்சை வழியாக செய்ய இயலும். "கார்ட்டி லேஜ் கல்ச்சர்" முறையில் முழுங்காலில் உள்ள ஒரு துளி ஜவ்வினை "பயாப்சி" எடுத்து அதை பரிசோதனை கூடத்தில் 45 மில்லியன் அணுக்கள் கொண்ட ஜவ்வாக மாற்றி அதை ஜவ்வு பழுதடைந்த இடத்தில் ஒட்டி விடலாம். இதனால் ஆரம்ப கட்ட நிலையில் உள்ளவர்களுக்கு நோய் மோசமாகாமல் பாதுகாக்க முடியும். மேலும் மூட்டு மாற்று சிகிச்சையை தவிர்க்க முடியும்.

-டாக்டர் K.N. சுப்பிரமணியன்,

வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436

## திருக்குறள்

**குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு**

**பொருள்:** அனைத்தையும் ஆராய்ந்து, அனுபவித்து ஒருவரை நம்புவது கடினம் தான், ஆகையால், குறைந்தபட்சம், நல்ல குடும்பத்தில் பிறந்தவனாகவும், இதுவரைக்கும் குற்றங்களில் சம்பந்தப்படாதவனாகவும், குற்றம் செய்ய அஞ்சுகிறவனாகவும் இருக்கிறவனிடத்தில் நம்பிக்கை வைக்கலாம்.

அதிகாரம் 51 | தெரிந்து தெளிதல் (யாரையும் ஆராய்ந்து அறிந்து நம்புதல்) | அரசியல்


சத்குரு ஶரணம் சரணம்

K.D. பத்மினி
(A to Z Arrangements) அவ்த்த லவி பூல் தேரியோ ※ வரவேற்பு அமைப்பாளர்

98946 71401 99426 71819
63819 26819 90255 17366

பத்மினி ஈவன்ட்ஸ்

★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு
★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)
மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.
5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.



Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award
www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in
தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist
Your Name is Your Life
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட' முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai
For Appointment
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





# ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj® RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical, Plumbing and Agri needs...



# மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



# உமா நகர்

ஒரு சென்ட்-ன் விலை ரூ. 5 L மட்டுமே

அரசு அனுமதி பெற்ற வீட்டு மனைகள் விற்பனைக்கு

(உடனடியாக வீடு கட்டுபவர்களுக்கும், நீண்டகால அடிப்படையில் வாங்கி வைப்பவர்களுக்கும் ஏற்ற சொத்து)

தொடர்புக்கு:
திரு. S.A. உதயகுமார்
நிறுவனர்
U K ஹோம்ஸ் & பிளாட்ஸ்,
மதுரை - 625012
+91 99659 81810

முகவரி: P.K.N. வித்யாலயா பள்ளி(CBSE) எதிர்புறம், வடகரை, திருமங்கலம் - 625 706. பஸ் ரூட்: 37B / பஸ் ஸ்டாப்: PKN கல்லூரி

எங்கள் லே-அவுட், திருமங்கலம் நகர் பகுதியில் இருந்து 3 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

info@onvgprint.com
+91 95 97 775 775
FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

visit : www.onvgprint.com

# onVGPrint.com

— A unit of VIGNESH GRAPHICS —

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.02.2023 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

# UG CHEMI JAGSAN

# U G கெமி ஜாக்சன்




(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



# வேல் மருத்துவமனை

## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

**Dr. K.N. சுப்ரமணியன்** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

» மூட்டு நுண்துளை சிகிச்சை » விபத்து அறுவை சிகிச்சை
» முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை » விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

# கைத்தறியில் ஓர் புதுமை

## Electronic Jacquard








**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm

**Applications :**

- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

## SRE CORPORATION

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan